மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2020 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ம் நாள் செவ்வாய்க் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திரு.ஓ.சங்கர்தாஸ், உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 406/17 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. செல்லக்குட்டி | வயது | .. |
| த/பெ. | .. சாமிநாதன் | சாதி | .. |
| கிராமம் | .. | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

01.12.2020 - வா.சா.1 குறுக்கு விசாரணை.

பரசுராமன், சின்னசாமி இருவரும் சுப்பிரமணி என்பவரின் மகன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வடக்கு தெற்காக 19. 1/2 அடியும், கிழக்கு மேற்காக 90 அடியும் கொண்டது. சின்னசாமி என்பவருக்கு வழக்குச்சொத்துக்கு வடபுறத்தில் பாகம் இருக்கிறது என்றால் சின்னசாமி என்பவருக்கு வடக்கு தெற்கில் 19. 1/2 அடியாக கிழக்கு மேற்கு 90 அடி நீளம் என்ற அளவில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவருக்கு வடக்கு தெற்காக 10 அடி அகலம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 30 வருடத்திற்கு முன்பாக பரசுராமன் என்பவருக்கும் சினன்சாமி என்பவருக்கும் வாய்மொழி பாகம் ஏற்பட்டது. மேற்படி பரசுராமன் என்பவருக்கு 19.1/2 அடியாக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. குடும்ப ஏற்பாட்டின்படி வாய்மொழியாக பாகம் ஏற்படுத்திக்கொண்டதாக ஆவணம் ஏதும் இல்லை. அவர் 19.1/2 அடி அகலத்தில் உள்ள சொத்தில் தான் அனுபவத்தில் இருந்தார். ஆவணம் ஏதும் இல்லாமல் நான் வழக்கில் குறிப்பிட்டிருக்கும் எ மற்றும் பி அட்டவணை சொத்துக்களின் அளவீடுகள், விஸ்தீரணம் மற்றும் ஜக்குபந்தி ஆகியவை அனைத்தும் தவறானவை எனறால் சரியல்ல. 1951ல் கூர்சீட்டு முன்னிலைக்கு பாகபிரிவினை ஏறுபடுத்தியுள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பில் கூறப்படுகிறது

என்றால் அது சரியல்ல. 1975க்கு பிறகு தான் வாய்மொழி பாகபிரிவினை ஏற்பட்டது. கிராம



நத்தம் சர்வே எண்.220/10ல் வடபுறத்தில் பிரதிவாதியும் தென்புறத்தில் நானும் உள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி வடபுறத்தை தற்போது மெத்தைவீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். முதலில் 10 அடி அகலத்தில் கூரைவீடு கட்டியிருந்தார். அதன் பிறகு எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு சொத்தின் சர்வே எண்ணின் அளவீடுகள் மொத்த விஸ்தீரணத்தில் வடக்கு தெற்கு 36.1/2 அடி என்றும், கிழக்கு மேற்கு 88அடி என்றும் கூறினால் அது தவறு. வடக்கு தெற்காக 29.1/2 அடியும் கிழக்கு மேற்காக 90 அடியும் உள்ளது. பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ள அளவானது 1951ல் ஏற்பட்டுள்ள கூர்சீட்டில் சொல்லப்பட்டுள்ள அளவு என்றால் அது சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் பரசுராமன் என்பவரிடத்தில் இருந்து எனது தந்தை சாமிநாதன் என்பவர் கிரையம் பெற்ற 15.12.1992 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் என்றால் சரிதான். இந்த கிரையபத்திரத்தில் உள்ள அளவீடுகளின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதலில் கிரையப்பத்திரம் பதிவு செய்யப்படும்போது சொத்து விவரத்தில் சர்வே எண்.222/5ல் 0.52 செண்ட் நிலம் என்றுதான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1ல் உள்ள சர்வே எண்ணும் விஸ்தீரணமும் தவறாக உள்ளதால் அதனை சரிசெய்வதற்காக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.454/2004 என்ற வழக்கில் எனது தந்தை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தீர்ப்பின் அடிப்படையில் தான் சர்வே எண்ணும் விஸ்தீரணமும் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் கிரையப்பத்திரத்தில் சர்வே எண்ணும் விஸ்தீரணமும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இருபக்க அளவுகளும் ஐக்குபந்திகளும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அ.வ.எண்.454/2004 என்ற வழக்கினை சின்னசாமி ஈ.பி.எண்.55/2006லும் பிரதிவாதியான சின்னசாமி மற்றும் அவரது வாரிசுகள் யாரும் தரப்பினர்கள் அல்ல என்பதால் மேற்படி வழக்கின் தீர்ப்பும், அதன் தொடர் நடவடிக்கைகளும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் தந்தைக்கு கிரையம் கொடுத்த பரசுராமனின் வாரிசுகளின் மீதுதான்

வழக்கு தொடுத்தோம். இவ்வழக்கின் வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ள பட்டாவானது பரசுராமன் மற்றும் சின்னசாமி ஆகியோரின் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் சரிதான்.



மேற்படி பட்டாபடி இருவருக்கும் சரிசமமாக பாகம் உள்ளது என்றால் சரியல்ல. அது தவறுதலாக உள்ள ஆவணம். பட்டாவில் உள்ள சொத்துக்கள் அனைத்தையும் வழக்கில் உள்ள எ அட்டவணை சொத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 பட்டாவில் உள்ள விஸ்தீரணத்தில் பாதி அளவுதான் எ அட்டவணைச்சொத்தில் எனக்கு உரிமையானது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் 19.1/2 அடிக்கு 90அடி சொத்தில் தான் குறிப்பிட்டுள்ளேன். பரசுராமனும் சின்னசாமியும் சகோதரர்கள் என்ற முறையில் எனது தாவாப்படி வழக்குச்சொத்தின் மொத்த அகலமான 29.1/2 அடியில் இருவருக்கும் சமமாக 14.3/4 அடி வீதம் இருவருக்கும் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தின் சர்வே எண்ணும் விஸ்திரணமும் தவறாக உள்ள நிலையில் வழக்குச்சொத்தில் நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ய மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அளவீடுகளும் ஐக்குபந்தியும் சரியாக உள்ள காரணத்தினால் நான் மனு செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் நியமித்து அளவீடு செய்யும்பட்சத்தில் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் நான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனது பேரன்காளான 3 முதல் 5வரையிலான பிரதிவாதிகளுக்கு 2ம் பிரதிவாதியின் கார்டியனாக கொண்டு தானசெட்டில்செண்ட் பத்திரம் 8.8.2005 எழுதிவைத்து அதன் படி தற்போது 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் அந்த வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் எனது சொத்தில் சர்வே எண்ணும் விஸ்தீரணமும் தவறாக உள்ளதை பயன்படுத்தி ஆவணங்கள் ஏற்படுத்தியதற்காக மேற்படி பத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எ, பி அட்டவணைச்சொத்துக்களும், அதில் உள்ள ஐக்குபந்திகள், சர்வே எண்கள், விஸ்தீரணம் போன்ற எல்லாமே தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் இதன் காரணமாக எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

Sd/-D.Ravi,
District Munsif,
Polur.